செ.கு.எண் : 55 நாள் : 7/02/12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.2.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல் வட்டத்தைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. பாலசுப்பிரமணி 6.2.2012 அன்று பழனிக்கு பாதையாத்திரை சென்று கொண்டிருந்த போது, திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கணக்கன்பட்டி கிராமம் அருகே, திண்டுக்கல் – பழனி தேசிய நெடுஞ்சாலையில் குமுளியிலிருந்து பழனிக்கு வந்து கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த திரு. பாலசுப்பிரமணியின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான திரு. பாலசுப்பிரமணியனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9